பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 08 வியாழக்கிழமை 22.05.2025 | அதிர்வு 292

## யுவதி கடத்தல்!

### யாழில் பரபரப்பு

யாழ்ப்பாணம் – மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணைக்குச் சென்று திரும்பிய இளம் தம்பதியினர் மீது கும்பல் ஒன்று தாக்குதல் மேற்கொண்டு, 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அநுரவே ஆள வேண்டும்! ஆனால் தீர்வு வேண்டும்!!

### மனோ எம்.பி. வலியுறுத்து



“ஆளுகின்ற அநுர அரசுக்குத் தெளிவான மக்கள் ஆணை கிடைத்தது. ஆகவே, அவர்கள் தான் நாட்டைத் தொடர்ந்து ஆளப் போகின்றார்கள். ஆளவும் வேண்டும். ஆனால், பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும்.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரச் சவால்கள் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:- 03▶

## 764, 769 வழி பஸ் சேவையில் எந்தவித மாற்றமும் இல்லை

### வடக்கு ஆளுநர் அறிவிப்பு



764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் பஸ் சேவைகளை காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் 03▶

## 100 கிலோகிராம் ஹெரோயினுடன் இருவர் சிக்கினர்



(எஸ்.ஜினோதன்)

அம்பாந்தோட்டை மாவட்டம், வீரகெட்டிய பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து 100 கிலோகிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது 03▶




## நல்லூர் முன்றிலில் அசைவ உணவகம்:

# பெயர்ப் பலகையை அதிரடியாக அகற்றியது யாழ். மாநகர சபை!

**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

நல்லூர் ஆலய முன்றிலில் யாழ். மாநகர சபையின் அனுமதியின்றி திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தின் பெயர்ப் பலகை மாநகர சபையினரால் அகற்றப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய முன்றிலில் யாழ். மாநகர சபையிடம் அனுமதி பெறாது, அசைவ உணவகம் திறக்கப்பட்டுள்ள நிலையில், உணவகத்துக்கான அனுமதிகளைப் பெறுமாறு மாநகர சபை உணவகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், அனுமதி இன்றி உணவகத்துக்கு முன்பாக வீதியோரமாக வைக்கப்பட்டிருந்த நிறுவனத்தின் பெயர்ப் பலகை மாநகர சபையினரால் இன்று வியாழக்கிழமை அகற்றப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் சில சுகாதாரக் குறைபாடுகள் காணப்பட்டமை தொடர்பில் மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நல்லூர் ஆலயச் சூழலில் புனிதத் தன்மையைப் பேணும் வகையில் குறித்த உணவகத்தை அகற்றக் கோரி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், நேற்று புதன்கிழமை மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.






# யாழில் இளைஞர் ஒருவர் மயங்கி வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணத்தில் தனது வீட்டில் இருந்து தொலைக்காட்சியில் ஐ.பி.எல். போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

சங்கானை, தேவாலய வீதியைச் சேர்ந்த பரமானந்தம் கோவிந் (வயது 26) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு உண வருந்திவிட்டு தொலைக்காட்சியில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்த வேளை திடீரென நெஞ்சு வலிப்பதாக கூறிய நிலையில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

அதனையடுத்து அவரை வீட்டார் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், இருதய அறைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டமையால் மரணம் சம்பவித்துள்ளது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 100 கிலோ...

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

101.47 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் தொகையுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### யுவதி கடத்தல்...

யுவதியைக் கடத்திச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் யுவதியின் கணவர் காயங்களுக்கு உள்ளான நிலையில், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட யுவதியை மீட்கப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த யுவதியும், பூநகரி பகுதியைச் சேர்ந்த இளைஞரும் காதலித்து வந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்தனர்.

இந்நிலையில், யுவதியின் பெற்றோர், தமது பிள்ளையைக் காணவில்லை என்று தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, அந்த யுவதி திருமணம் செய்து வாழ்ந்து வருவது தெரியவந்தது.

அதனையடுத்து அந்த யுவதியையும், அவரது கணவரையும் பொலிஸ் நிலையம் அழைத்துப் பெற்றோரின் முறைப்பாட்டை முடிவுறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

அதற்கு யுவதியின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தமையால் மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்

குறித்த வழக்கு விசாரணைக்காக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்துக்கு நேற்று யுவதியும் அவரது கணவரும் வந்த பின்னர், இருவரும் நீதிமன்றை விட்டு வெளியே வந்த நிலையில், நீதிமன்றத்துக்கு அருகில் பட்டா ரக வாகனத்தில் காத்திருந்த யுவதியின் சகோதரன் அடங்கிய கும்பல், யுவதியின் கணவன் மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு யுவதி மீதும் தாக்குதலை மேற்கொண்ட பின்னர், யுவதியை வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றனர்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், கடத்திச் செல்லப்பட்ட யுவதியை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### 764, 769 வழி...

தெரிவித்துள்ளார் .

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக பஸ் சேவையை ஒழுங்குபடுத்தி கண்காணிப்பதாக யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆளுநர் செயலகக் கூட்டத்தில் உறுதியளித்திருந்த நிலையில் அதனைச் செயற்படுத்துமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தொலைபேசியூடாக ஆளுநர் அறிவுறுத்தினார்.

### அநுரவே...

"ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. பல பிரபல ஆடை தொழில் முனைவர்கள் சத்தமில்லாமல் தம் தொழிற்சாலைகளை அயல் நாடுகளுக்குக் கொண்டு போகின்றார்கள். வேலை இழப்பு. உள்நாட்டில் பணப்புழக்கம் குறைகின்றது. நாளை மின்சார விலை உயர்வு வருது. ஆனால், 2024 ஆம் ஆண்டு இலாபம் காட்டிய மின்சார சபை இன்று எப்படி ஆறு மாதத்தில் நட்டம் என்று கேட்டால் பதில் சொல்ல ஆளில்லை.

2024ஆம் ஆண்டு 5 சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி, இந்த வருடம் 3.5 சதவீதமாக இருக்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கியும், 3.4 சதவீதம் என உலக வங்கியும் கூறுது.

அடுத்த வருடம், இது 3.2 சதவீதமாகக் குறையலாம் என அதே ஆசிய அபிவிருத்தி வங்கி கூறுகின்றது.

இதில் 2028ஆம் ஆண்டில் இருந்து வெளிநாட்டுக் கடன் தவணைகள் கட்டனும். இவை எதற்கும் அரசிடம் தீர்க்கமான தீர்வுகள் இல்லை. இனி ஒரு நெருக்கடி வருகின்றதா? வந்தால் நாடு தாங்குமா?

முதல் சம்பவம், தைத்த ஆடை ஏற்றுமதி துறை சார் ஆடைத் தொழிற்சாலை ஒன்று ஆயிரத்து நானூற்றுக்கு அதிகமான தொழிலாளரை விலத்தி விட்டார்கள். ஏற்கனவே பல பிரபல ஆடைத் தொழில் முனைவர்கள் சத்தம் இல்லாமல் தம் தொழிற்சாலைகளை இந்தியாவுக்கும், வியட்நாமுக்கும் கொண்டு போகிறார்கள்.

ட்ரம்ப் வரி விவகாரத்தின் பிரதிபலிப்பு இதுவாகும். அது இன்னமும் முடிவுக்கு வரவில்லை. "ட்ரம்ப் நிர்வாகத்துடன் நாம் பேசி விட்டோம். இதோ, ஸ்ரீலங்காகா-யூஎஸ் கூட்டு அறிக்கை வருகிறது" என அநுரவே சொன்னார். ஆனால், "அதெல்லாம் இல்லை. நூற்றுக்கணக்கான நாடுகளுடன் ஒவ்வொன்றாகக் கூட்டு அறிக்கை வெளியிட முடியாது. இலங்கை அரசின் விளக்கம் பிழை," என நான் கேட்ட போது யூஎஸ் தரப்பில் இருந்து விளக்கம் தந்தார்கள்.

இன்று வெளிநாட்டில் கடன் வாங்க முடியாத, இலங்கை அரசு, என்ன செய்கின்றது? பண வீக்கம் கூடும் என்பதால், ஐ.எம்.எப். நிபந்தனை காரணமாக பணத்தாள் அச்சடிக்கவும் முடியாது. இந்நிலையில், 2024 செப்டெம்பர் முதல் டிசம்பர் வரைக்குள் மட்டும் உள்நாட்டுக் கடனாக திறைசேரி உண்டியல்கள் விற்று ரூ: 44,000 கோடி கடன் வாங்கி அரச ஊழியர் சம்பளம் மற்றும் செலவுகளை சமாளிக்கின்றது.

வெளிநாட்டில் இருந்து இந்தியா, சர்வதேச நாணய நிதி, உலக வங்கி போன்றவை தரும் நன்கொடை, குறை வட்டி அல்லது வட்டியில்லா கடன்கள் மட்டுமே.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருவிழா முடிவுக்கு வருகின்றது. சந்தடி அடங்க, உண்மைப் பிரச்சினைகள் மேலே எழுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லாத அரசு, அதே பழைய எதிர்க்கட்சி கால அரசியல் செய்து, அரச செலவுகளை குறைக்கின்றோம், திருடர்களைப் பிடிக்கின்றோம் என்று சொல்லி, சொல்லியே காலத்தை ஓட்டுகின்றது.

செலவுகளைக் குறைப்பது, திருடர்களைப் பிடிப்பது நல்ல விடயம்தான். நாம் ஆதரவளிக்கின்றோம். ஆனால், அது மட்டும் அரசு அல்ல என்று சொன்னால் இவர்களுக்கு விளங்குவது இல்லை.

ஜனாதிபதித் தேர்தல், இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றில் பெறுபேறு எப்படி இருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலில் ஆளுகின்ற அநுர அரசுக்குத் தெளிவான மக்கள் ஆணை கிடைத்தது. ஆகவே, அவர்கள்தான் நாட்டைத் தொடர்ந்து ஆளப் போகின்றார்கள். ஆளவும் வேண்டும். ஆனால், பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருவிழா முடிவுக்கு வருகின்றது. சந்தடி அடங்க, உண்மை பிரச்சினைகள் மேலே எழுகின்றன. இனி கட்சி அரசியல் சண்டைகளை நிறுத்தி விட்டு அரசும், எதிர்க்கட்சிகளும் இவற்றைக் கவனத்தில் எடுக்க வேண்டும்." - என்றார்.



# உரிய நேரத்துக்கு அலுவலகம் வாருங்கள்! பொதுமக்களைக் காக்க வைக்காதீர்கள்!!

## அரச அலுவலர்களிடம் வடக்கு ஆளுநர் வேண்டுகோள்

“பல திணைக்களங்களுக்கு அலுவலர்கள் காலை 9 மணிக்குத்தான் வருகின்றார்கள். காலை 8.30 மணிக்கு முன்னர் அலுவலகம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. திணைக்களத் தலைவர்கள், அலுவலர்களின் ஒழுக்கம் – கட்டுப்பாடு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அலுவலகத்துக்கு வரும் பொதுமக்களைக் காக்க வைக்காதீர்கள்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கும் இடையிலான மாதாந்த கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் ஆளுநர்களுடனான சந்திப்பின்போது மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை இந்த ஆண்டுக்குள் செலவு செய்யவேண்டும் என அறிவுறுத்தியதாகவும், அதற்கு



அமைவாக வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை உரிய திட்டங்களுக்கு உரியவாறு செலவு செய்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

திட்டங்களை திணைக்களத் தலைவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு தொடர் கண்காணிப்பை முன்னெடுப்பதன் ஊடாகவே விரைவாக செயற்படுத்தி முடிக்க முடியும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், பின்தங்கிய கிராமங்களிலிருந்து மக்களின் கோரிக்கைகளை உள்வாங்கியே திட்டங்களை அடையாளப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை உரியவாறு செலவு செய்வதன் ஊடாக அடுத்த ஆண்டு அதிகளவான நிதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருப்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும், திணைக்களங்களுக்கு இடையிலான கடிதப் பரிமாற்றங்கள் மின்னஞ்சல் ஊடாக முன்னெடுக்கப்பட்டு பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்எனஅறிவுறுத்தியஆளுநர்,திணைக்களத் தலைவர்கள் இதனைப் பின்பற்றவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன் பின்னர் பிரதிப் பிரதம செயலாளரால் ஒவ்வோர் அமைச்சுக்கள், அதன் கீழான திணைக்களங்களில் திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக தெரியப்படுத்தப்பட்டன.

அதில் ஒவ்வோர் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் முன்னெடுக்கும் திட்டங்களில் உள்ள இடர்கள் தொடர்பில் ஆராயப்பட்டு மாற்று ஒழுங்குகள் பரிந்துரைக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் 5 அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதன் கீழான அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இன்று கரி நாள்

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்றைய நாள் இன்னொரு கறுப்பு தினமாகும்.

தமிழர்களுடைய - தமிழர் தேசத்தினுடைய - இறையாண்மை முழுமையாக சிங்கள தேசத்தினால் கபளீகரம் செய்யப்பட்டதை குறியீடு செய்யும் நாள் இது.

1948 இல் வெள்ளைக்காரரின் ஆட்சியில் இருந்து விடுபட்டு, இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்பட்ட பின்னர், அது முதல் பிரித்தானிய முடிக்கு கீழான டொமினியன் நாடாக இருந்த இலங்கை, அந்தக் காலனித்துவத்திலிருந்து முழுமையாக விடுதலை பெற்று, ஒரு குடியரசாக மாறியது சரியாக 53 ஆண்டுகளுக்கு முன்னர் இதே மே 22 ஆம் திகதி தான்.

இலங்கையின் அரசமைப்பு, இந்த நாட்டின் ஆட்சி முறைமை ‘ஒற்றையாட்சி’ எனவும், சிங்களம் மட்டுமே இலங்கையின் உத்தியோகபூர்வ மொழி எனவும் பிரகடனப்படுத்தி, அதை நடைமுறைக்குக் கொண்டு வந்த தினம் இன்றைய நாள்தான். இலங்கை, ‘சிறிலங்கா’ வாக மாறியதும் கூட இந்தத் தினத்தில் தான்.

பௌத்தத்துக்கு தனித்து முன்னுரிமை கொடுத்து, முதன்மை இடமளித்து, அதைப் பேணிப் பாதுகாத்து, போஷித்து வளர்ப்பது அரசின் இன்றியமையாத கடமை என்ற கட்டாயப்படுத்தலை முதலில் உறுதி செய்ததும் இந்தத் தினத்தில் நடைமுறைக்கு வந்த இந்தக் குடியரசு அரசமைப்புதான்.

தமிழர்களை முழுமையாக அடிமைப் படுத்தும் விலங்கு, அநீதிச் சட்டம் மூலம் நிலைநிறுத்தப்பட்ட தினம் இந்த நாள் தான். அதனால் இதனை தமிழர்கள் கறுப்பு தினமாகவே - கரி நாளாகவே - அனுஷ்டித்து வந்தார்கள்.

ஆயினும், குடியரசை உருவாக்கிய அந்த அரசமைப்பின் நடைமுறையாக்கத்துக்கு 6 ஆண்டுகளுக்குப் பின்னர் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையைக் கொண்ட அரசமைப்பின் கீழ், தமிழ் தேசத்திற்கு மாட்டப்பட்ட விலங்கு - அடக்குமுறை - மேலும் இறுக்கமாக்கப்பட்டது. அப்போது கொண்டுவரப்பட்டு கடந்த 47 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் தற்போதைய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் இலங்கை குடியரசாக பிரகடனப் படுத்தப்பட்ட மே 22ஆம் திகதி ‘குடியரசு தின’மாக பெரிய அளவில் அனுஷ்டிக்கப்படாவிட்டாலும் இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை இது ஒரு கரிநாள்தான்.

இந்தக் குடியரசு அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் மிகப்பெரிய வேடிக்கை என்னவென்றால், முன்னர் தனிச் சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்ட போது அதை ஆட்சேபித்து ‘ஒரு மொழி, இரு நாடுகள்; இரு மொழிகள், ஒரு நாடு’ என நாடாளுமன்றத்தில் எச்சரிக்கைப் பிரகடனம் செய்த இடதுசாரியான கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வாதான் சிங்களத்தை மட்டும் உத்தியோகபூர்வ மொழியாகப் பிரகடனப்படுத்தும் இந்த அரசமைப்பின் பிதாமகராகவும் அமைந்தார் என்பதுதான்.

இந்த 1972 ஆம் ஆண்டின் குடியரசு யாப்பும், பின்னர் 1978ல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை உறுதிப்படுத்தும் அரசமைப்பும் தமிழர்களின் பிரதிநிதிகளின் பங்களிப் பின்றி உருவாக்கப்பட்டு, அவர்களின் மீது சிங்களத்தினால் வல்வந்தமாகத் திணிக்கப்பட்டவை. அதனால், அதற்கு எதிராக இதுவரை காலமும் ஈழத் தமிழர்கள் முன்னெடுத்த உரிமைக்கான - விடுதலைக்கான - அரசியல் போராட்டத்தில் ஒரு நீதி, நியாயம், தார்மீக உரித்து இருப்பதாக உலகம் கருதியது.

ஆனால் இப்போது தேசிய மக்கள் சக்தி புதிய அரசமைப்பை உருவாக்கும் நாடாளுமன்ற வலுவோடும், நிறைவேற்ற அதிகாரத்தோடும் ஆட்சிக்கு வந்திருக்கின்றது. அதற்கு தங்கள் பிரதிநிதிகளையும் கணிசமாக அளித்து தமிழர்கள் தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போட்டு இருக்கிறார்கள். இப்போது இந்த அரசு கொண்டுவரப் போகின்ற அரசமைப்பு தமிழர் பிரதிநிதிகளின் பங்களிப்போடும் நிறைவேற்றப்பட்டதாகவே தமிழர் தலை மீது திணிக்கப் படப் போகின்றது. அதுதான் வரலாற்றில் தமிழர் தேசம் எதிர்கொள்ளும் பெரும் துரதிஷ்டமாகும்.



# குண்டும் குழியுமாகக் காணப்படும் வீதியைப் புனரமைப்பது யார்?

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பெரிய நீலாவணை முதல் நிந்தவூர் வரையிலான பொது மக்கள் இந்தக் கரையோர பாதையினை அன்றாடம் பயன்படுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தக் கரையோர பாதையானது பாண்டிருப்பு எல்லை வீதி கரையோர வீதியுடன் இணையும் பகுதியில் இருந்து குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியால் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இந்த வீதி ஊடாக அன்றாடம் அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பயணம் செய்து வருகின்றனர்.

மழை காலங்களில் இந்த வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் இவ்வீதியால் செல்வோர் பல்வேறு விபத்துகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.



# மண்முனைப்பற்றுக் கோட்டத்தில் சர்வதேச நடன தின நிகழ்வுகள்!





(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள மண்முனைப்பற்று கோட்ட ஆசிரியர்களின் பங்கேற்புடன் சர்வதேச நடன தினம் மட்டக்களப்பு ஆரையம்பதி இராம கிருஷ்ணமிஷன் மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மண்முனைப்பற்றுக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் நடன மாணவர்களின் நடன ஆற்றுகைகள் அளிக்கை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பின் மண்முனை வடக்கு மற்றும் ஏறாவூர்ப்பற்றுக் கோட்டங்களிலும் சர்வதேச நடன தினம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவம் - பொது மக்களுக்கும் இடையில் மன்னாரில் நட்புறவுக் கரப்பந்தாட்டப் போட்டி!





**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

இராணுவத்துக்கும் பொது மக்களுக்கும் இடையில் நட்புறவை வலுப்படுத்தும் வகையில், இராணுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கரப்பந்தாட்ட போட்டி செவ்வாய்க்கிழமை (20) மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கும், இராணுவத்தின் இரு அணிகள் உள்ளடங்களாக ஏழு அணிகள் கலந்து கொள்ளும் சுற்றுப் போட்டியாக இது ஆரம்பமானது.

இராணுவத்தின் 542 ஆவது படைப் பிரிவின் கட்டளையிடும் தளபதி பிரிகேடியர் ஏ.ஆர்.சி.அசூர சிங்க தலைமையில் போட்டி நடைபெற்றது.

விளையாட்டு நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அதிகாரி, மன்னார் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக இடம் பெறும் இந்தப் போட்டியின் இறுதி நிகழ்வு எதிர்வரும் ஜூன் 4 ஆம் திகதி இடம் பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தம்பலகாமத்தில் தொழிற்சந்தை!

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் தொழிற் சந்தை ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை இடம் பெறவுள்ளது என்று பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தொழிற் சந்தையை மனித வலு வேலை வாய்ப்பு திணைக்களமும் தம்பலகாமம் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இதில் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த பல நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன. அன்றைய தினம் கல்வித் தகைமை, தொழில்சார் சான்றிதழ்களுடன் வருகை தந்து வேலை வாய்ப்புக்களை பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# உடப்புக் கிராமத்தில் கடலரிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரும் மக்கள்

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் மாவட்டம், உடப்பு கிராமத்தில் கடந்த சில தினங்களாக தென்மேல் பருவக்காற்றின் வேகத்தால் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடலின் கரை ஓரங்கள் பாரிய மண் குழிகளாகக் காணப்படுகின்றன. இதனால் மீனவர்களின் படகுகளை கடலில் இறக்குவது மிகவும் கஷ்டமாகியுள்ளது எனவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

அதேநேரம் கடலரிப்புக்கான கற்கள் போடும் பணியும் குறிப்பிட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடலின் கொந்தலிப்பால் கரையிலுள்ள மண் மேடுகள் கடலுக்குள் செலவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதனால் இன்னும் பல வருடங்களில் கடல் நகருக்குள் உள் வாங்கும் சந்தர்ப்பமும் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்க வேண்டுமென மக்கள் வேண்டுகின்றனர்.



# மன்னார் மாந்தை கிராமத்தில் காணி அனுமதிப் பத்திரம் வழங்கல்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் உள்ள திருக்கேதீஸ்வர கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த மாந்தை கிராமத்தில் வசிக்கும் 27 குடும்பங்களுக்கு செவ்வாய்க்கிழமை (20) காணி அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தலைமையில் மாந்தையில் இடம்பெற்ற குறித்த காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வில். மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) தமா சிறிஸ்கந்தராஜா மற்றும் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர் கிராம மட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களுக்குக் காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கி வைத்தனர்.

குறித்த 27 குடும்பங்களுக்குக் காணி அனுமதிப்பத்திரங்கள் நீண்ட காலமாக வழங்கப்படாமல் இருந்த நிலையில், அரச சட்ட திட்டங்களுக்கு அமைவாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்கிய காணி தொடர்பில் கலந்தாய்வு

(எஸ்.கீதபொன்கலன்)



திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 11 கிராம அலுவலர் பிரிவுகளில், இலங்கை துறைமு அதிகார சபைக்கென அரசால் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பில், அதனால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு தீர்வை வழங்கும் வகையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா, துறைமுகங்கள் மற்றும் விமான போக்குவரத்துத்துறை பிரதி அமைச்சர் ஜெனித ருவான் கொடித்துவக்கு, இலங்கை துறைமுக துறைமுக அதிகாரசபையின் தலைவர் அட்மிரல் ஸ்ரீ மேவன் ரணசிங்க, சிரேஷ்ட துறைமுக அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் நாடாளுமன்ற கட்டடத்தில் நடந்த இந்த விசேட கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இந்தக் கலந்துரையாடல் திருகோணமலையில் பல ஆண்டுகளாக உள்ள அரச காணிகள் தொடர்புடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்தில் நடைபெற்றது.

தற்போது இலங்கை துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ள லிங்கநகர், மட்கோவ், பாலையூற்று, பூம்புகார், சிங்ஹபுர, கவட்டிக்குடா, வெள்ளைமணல், நாச்சிக்குடா, சுமேதங்கரபுர, கப்பல்துறை மற்றும் முத்துநகர் ஆகிய இடங்களில் வாழும் மக்களுக்கு உரிய நில உரிமைகளை மீள சட்டரீதியாக வழங்குவது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் விளைவாக 1700 ஏக்கர் அளவுடைய நிலம் சட்டரீதியாக விடுவிக்கப்படக்கூடியது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் மூலம் காணிகளை மீளளிப்பது மட்டுமல்லாது, பாதிக்கப்பட்ட மக்களின் உரிமையையும், கௌரவத்தையும் பாதுகாக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நகர்வாகவும் இது காணப்படுகின்றது.



# கதிர்காம பாத யாத்திரிகர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி

## பட்டித்திடல் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து வழங்கல்

சைவமரபு– பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரிகர்களுக்கு திருகோணமலை, மூதூர் தொகுதியில் அமைந்துள்ள பட்டித்திடல் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து, பழ வகைகளான அப்பிள், ஒரேஞ் மற்றும் தேநீர் தயாரிக்கத் தேவையான பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.



# மன்னாரில் உற்பத்தி பொருள்களுக்கு தரச்சான்றிதழ் விரைவில் கிடைக்கும்!

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் அரச அதிபர் கனகேஸ்வரன்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் உற்பத்தியாளர்களின் உற்பத்தி பொருள்களுக்குத் தரச் சான்றிதழ் விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.



ஐக்கிய இராச்சிய மன்னார் நலன்புரி சங்கத்தின் 55 லட்சத்திற்கு மேற்பட்ட நிதியுதவியின் மூலம் பேசாலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான உற்பத்தி நிலைய திறப்பு விழா நேற்று புதன் கிழமை இடம்பெற்றபோது இதற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய இராச்சிய மன்னார் நலன்புரி சங்கம் மன்னார் மாவட்டத்துக்குச் செய்துவரும் பணி மிகவும் மகத்தானது.

மன்னார் மாவட்டத்தில் எங்கே தேவை இருக்கின்றதோ, அந்த இடத்தை நிரப்புவதில் ஐக்கிய இராச்சிய மன்னார் நலன்புரி சங்கம் அதிக கவனம் செலுத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி தேவையை உணர்ந்து அதை நிவர்த்தி செய்துள்ளது ஐக்கிய இராச்சிய மன்னார் நலன்புரி சங்கம்.

நான் மன்னாருக்கு அரச அதிபராகக் கடமையாற்ற வந்ததும் இவர்கள் என்னிடம் இங்குள்ள மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக கலந்துரையாடி அவர்களுக்கான திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இதுமட்டுமல்ல இவர்கள் பல விதமான திட்டங்களை இந்த மாவட்டத்தில் முன்னெடுத்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் இங்குள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மாற்றாற்றல் அமைப்பினருக்கு பலவிதமான திட்டங்களைத் தற்போது முன்னெடுத்து வருகின்றனர்.

பேசாலை பகுதியில் பத்து விதமான உணவு உற்பத்தி செய்யும் விதத்தில் இதற்கான நிலையத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளனர்.

அத்துடன் முள்ளம்தண்டு பாதிப படைந்தவர்களுக்கும், அவர்களின் வாழ்வாதாரத்தையும் உடல் நலத்துக்குமான உதவிகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களின் இந்தத் திட்டம் தற்போது மன்னாரில் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இங்கு நடைபெறும் திட்டங்கள் போன்று மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச பகுதிகளிலும் இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த ஐக்கிய இராச்சிய அமைப்பினர் புலன்பெயர்ந்து வாழ்ந்தாலும் மன்னார் மக்கள் நலன் நோக்கி செயல்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருக்கின்றது.

இவர்களால் முன்னெடுக்கப்படும் நல்ல திட்டங்களுக்கு இங்குள்ள உத்தியோகத்தர்களாகிய நாங்களும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கின்றோம்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களுக்குத் தரச் சான்றிதழ் மிகவும் முக்கியமானது. இதை நாங்கள் குறுகிய காலத்தில் உற்பத்தியாளர்களுக்கு செய்து கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் புலம்பெயர்ந்து வாழும் மக்களைக் கொண்டே சந்தைப்படுத்த முயற்சிக்கலாம்.

சுற்று நிருபங்கள் அடிக்கடி மாற்றம் பெறுவதால் வெளிநாடுகளில் இருந்து வரும் உதவிகளிலும் சிக்கல்கள் ஏற்படலாம்.

இதற்கு முகம் கொடுக்கும் முகமாக எமது மாவட்டதில் உள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிகளுக்கும் பொதுவாக இருக்கின்ற தேனீ மாற்றாற்றல் அமைப்பை அரச சார்பற்ற நிறுவனமாக அமைய நடவடிக்கை தற்பொழுது எடுக்கப்பட்டு வருகின்றது. இது விரைவில் நிவர்த்தி செய்யப்படும் .– என்றார்.






# ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையின் திருவுடல் மரியாள் பேராலயத்தில் நல்லடக்கம்!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான் மட்டக்களப்பு)**

நித்திய இளைப்பாறிய மட்டக்களப்பு மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையின் திருவுடல் நேற்று (21) மாலை மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்துக்குள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சுகயீனமுற்றிருந்த நிலையில் கடந்த 19 திகதி தனது 74 ஆவது வயதில் ஓய்வுநிலை ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை காலமானார்.

அவரின் திருவுடல் தன்னாமுனை தேவாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்து. செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கு இரு தினங்களாக அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இரண்டு நாள்களும் பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்தி வந்த நிலையில் நேற்று மாலை மட்டக்களப்பு மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இறுதி நாள்கூட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் இலங்கையின் மறை மாவட்டங்களின் ஆயர்கள், சர்வ மதங்களின் குருமார்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளின் பிரதிநிதிகள்இ மட்டக்களப்பு மாவட்ட பல் சமய ஒன்றிய உறுப்பினர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மறைந்த ஓய்வு நிலை ஆயரின் ஆத்மா சாந்தி வேண்டி விசேட பிரார்த்தனை வழிபாடுகளும் இங்கு இடம்பெற்றன. அன்னாரின் ஆன்மீகப் பணிகள் மற்றும் பொதுப்பணிகள் தொடர்பில் அங்கு நடைபெற்ற இரங்கல் உரையின்போது பல்வேறுகருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்ற நிலையில் விசேட வழிபாடுகளுடன் மக்களின் கண்ணீருக்கு மத்தியில் மறைந்த ஓய்வு நிலை ஆயரின் திருவுடல் புனித மரியாள் பேராலயத்தின் பீடப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.









# மாற்றுத் திறனாளிகளின் உற்பத்தியை ஊக்குவிக்க பேசாலையில் நிலையம்!



**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

மாற்றுத் திறனாளிகளின் சுய உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்து விற்பனை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் மன்னார் நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் நிதி உதவியுடன் மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி மாற்றுத் திறனாளிகள் அமைப்பால் ஸ்தாபிக்கப்பட்ட மன்னார் விக்டரி உற்பத்தி நிலையம் நேற்று புதன்கிழமை (21) காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் பிரதேசச் செயலாளர் எம். பிரதீப் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டு நிலையத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் விருந்தினர்களாக பேசாலை பங்குத்தந்தை அருட்தந்தை சஞ்சுவம் சத்தியராஜ், மன்னார் நலன்புரி அமைப்பு ஐக்கியராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன், வடமாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தர்ம ராஜன் வினோதன், மன்னார் நலன்புரி அமைப்பு ஐக்கியராச்சியத்தின் பொருளாளர் தேவசகாயம் கில்மன், பேசாலை புனித வெற்றி நாயகி மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் மதிவளன் பெணாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து வருகை தந்த விருந்தினர்கள் குறித்த உற்பத்தி நிலையத்தில் முன்னெடுக்கப்படும் உற்பத்திகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன், உற்பத்திப் பொருள்களையும் பார்வையிட்டனர்.

## சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய மகோற்சவம்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மகோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25) ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிரசித்தி பெற்ற உலகம் உய்ய அருள் சுரக்கும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மகோற்சவ பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்ற திருவிழாவுடன் ஆரம்பமாகவுள்ளது.

அதேவேளை, அடுத்தமாதம் 10 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 11 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை, தினமும் காலை மாலை வேத பாராயணமும் அபிராமி அந்தாதி பாராயணம் என்பனவும் இடம்பெறும்.

## முதலை இழுத்துச் சென்ற நபர் உருக்குலைந்து சடலமாக மீட்பு!



மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரான் பாலம் மந்திரியாறு பகுதியில் முதலை இழுத்துச் சென்ற நபர் இரண்டு நாள்களின் பின்னர் இன்று (22) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த 20 ஆம் திகதி, மந்திரியாறு நீரோடை பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த போதே அவரை முதலை இழுத்துச் சென்றிருந்தது.

சுங்கான்கேணி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரையே இவ்வாறு முதலை இழுத்துச் சென்றுள்ளது.

முதலை இழுத்துச் சென்ற இளம் குடும்பஸ்தரை கடந்த இரண்டு நாள்களாகக் குடும்ப உறவுகள் மற்றும் பொது மக்கள் இணைந்து தேடும் பணிகளில் ஈடுபட்டனர்.

இதன்போது, இன்று காலை இடுப்புக்கு கீழ் பகுதி அற்ற நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ளவத்தையில் மீட்கப்பட்ட ரி - 56; அரசியல்வாதி ஒருவருக்குச் சொந்தம்!

## பொலிஸ் விசாரணையில் வெளியானது தகவல்

வெள்ளவத்தை - ஹெவ்லொக் வீட்டுத் தொகுதியில் கைப்பற்றப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மிகவும் பலம்வாய்ந்த அரசியல்வாதி ஒருவருக்கு சொந்தமானது என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முன்னாள் அமைச்சரான இந்த அரசியல்வாதி, 6 மாதங்களுக்கு முன்பு தனது சமையல்காரர் மூலம் ஹெவ்லொக் வீட்டுத் தொகுதியில் உள்ள ஒரு பெண்ணின் வீட்டுக்கு இந்தத் துப்பாக்கியை அனுப்பி, அதை ஒளித்து வைக்குமாறு அறிவுறுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெவ்லொக் வீட்டுத் தொகுதியில் வசிக்கும் 68 வயதுடைய ஒரு பெண்ணிடம் இந்த ஆயுதத்தை கொண்டு வந்து ஒப்படைத்த முன்னாள் அமைச்சரின் சமையல்காரரை கைது செய்வதற்கு நேற்று மாலை



சிறப்புப் பொலிஸ் குழு அவிசாவளைப் பகுதிக்கு சென்றிருந்தது.

விசாரணைகளில் இந்த முன்னாள் அமைச்சர் ஹெவ்லொக் வீட்டுத் தொகுதியில் வசிக்கும் 68 வயதுடைய ஒரு பெண்ணின் நெருங்கிய நண்பர் என்பது தெரியவந்துள்ளது.

பையில் ரி -56 ரக துப்பாக்கி இருப்பது தெரியாமல் ஆயுதம் அடங்கிய பையை அந்தப் பெண் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பை 6 மாதங்களாக அந்தப் பெண்ணின் வீட்டில் இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்தப் பெண், அந்தப் பையை முன்னாள் அமைச்சரின் சமையல்காரர்களில் ஒருவர் தன்னிடம் கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சரும் கைது செய்யப்பட வுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆயுதம் ஏன் இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டது, அந்த ஆயுதத்தால் என்ன குற்றம் செய்யப்பட்டது என்பது குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் இணைந்து பூநகரியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை

(த.சுபேசன்)

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அந்தப் பகுதியிலுள்ள அரச நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து பொது இடங்களில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுகளான பூநகரி, ஜெயபுரம், முழங்காவில் பகுதிகளை அண்மித்த பிரதான வீதிகள் மற்றும் வியாபார நிலையங்களை மையப்படுத்தி டெங்குக் கட்டுப்பாட்டு கண்காணிப்பு, சுகாதார தகவல் அறிவிப்பு மற்றும் கொள்கலன்கள் அகற்றல் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் பிதேச சபை, பிரதேச செயலகத்தினர், பொலிஸார் , வைத்திய சாலை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், வர்த்தக நிலையப் பணியாளர்கள் மற்றும் பிதேச பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நீர்தேங்கி நுளம்பு பெருகக் கூடிய பொலித்தீன், பிளாஸ்ரிக், ரயர்கள், போத்தல்கள், நீரேந்தக் கூடிய பெருள்கள் என பெருமளவான கழிவுகள் சேகரிக்கப்பட்டு பிரதேச சபையின் உதவியுடன் அகற்றப்பட்டன.

# சென்னை, மும்பை, அகமதாபாத்தில் கொரோனா தொற்று: பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரிப்பு

ஹொங்கொங், சிங்கப்பூர் உள்ளிட்ட ஆசிய நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருகிறது. இந்நிலையில், இந்தியாவின் மும்பை, சென்னை மற்றும் அகமதாபாத் உள்ளிட்ட நகங்களிலும் கொரோனா பாதிப்பு கணிசமாக அதிகரித்து வருகிறது. எனினும், முந்தைய கொரோனா அலையுடன் ஒப்பிடும் போது இது மிகவும் குறைவு ஆகும்.

மகாராஷ்டிர மாநிலத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை 106 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக மும்பையில் மே மாதத்தில் மட்டும் 95 பேர் பாதிக்கப்பட்டனர். 16 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா பரவலைத் தடுக்க, காய்ச்சல் அறிகுறி உள்ள அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் 12 பேருக்கு புதிதாக கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. சென்னையில் இன்ப்ளுயன்சாவால் ஏற்பட்டதாகக் கூறப்படும் காய்ச்சலுக்கு கொரோனா தொற்றுடன் தொடர்பு இருப்பது அதிகரித்து வருகிறது. தொற்று அபாயம் அதிகரித்



துள்ளதால், சில மருத்துவமனைகள் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மற்றும் இதய அறுவை சிகிச்சை உள்ளிட்ட முக்கிய சிகிச்சைகளை தாமதப்படுத்தி உள்ளன.

சென்னையில் உள்ள கிளென் ஈகிள்ஸ் ஹெல்த்சிட்டியின் தொற்று நோய் நிபுணர் வைத்தியர் சுப்ரமணியம் சுவாமிநாதன் கூறும்போது, “வைரஸ் பாதிப்பு உள்ள நோயாளிகளுக்கு கொரோனா தொற்று இருப்பது அதிகரித்து வருகிறது” என்றார்.

பொது சுகாதார இயக்குநர் வைத்தியர் டி.எஸ்.செல்வ விநாயகம் கூறும்போது, “மக்கள் நெருக்கம் உள்ள பகுதிகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் பீதி அடையத் தேவையில்லை. கொரோனா தொற்று முற்றிலும் மறைந்துவிடவில்லை. பருவ காலங்களில் குறைந்த அளவில் பரவி வருகிறது.” என்றார்.

கர்நாடகாவில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத் துறை அமைச்சர் தினேஷ் குண்டு ராவ் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் கடந்த ஓரிரு ஆண்டாக, மாதத்துக்கு ஒருவர் மட்டுமே கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வந்த நிலையில், அகமதாபாத்தில் ஒரே நாளில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் வீட்டில்தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று பரவல் முடிவுக்கு வந்துவிட்டதாக உலக சுகாதார அமைப்பு கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் அறிவித்தது. ஆனாலும், உலகம் முழுவதும் ககொரோனா பரவி வருகிறது. இந்தியாவில் கொரோனா பாதிப்பு சிறிய அளவில் இருந்து வருகிறது. இந்த தொற்றால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

வயதானவர்கள், கர்ப்பிணிகள், உடல்நல பாதிப்பு உள்ளவர்கள் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வழக்கம்போல முகக்கவசம் அணிவது மற்றும் அவ்வப்போது சோப்பு போட்டு கைகளை கழுவுவது உள்ளிட்ட முன்னெச்சரிக்கையை கடைபிடிக்க வேண்டும் என சுகாதார துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.



## ஆந்திர நிதித்துறை கட்டடத்தில் தீ விபத்து

ஆந்திர மாநில நிதித்துறை கட்டடத்தில் நேற்று தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதில் கணினிகள், சில முக்கிய ஆவணங்கள் எரிந்துள்ளன என தெரியவந்துள்ளது.

அமராவதியின் மங்களகிரி பகுதியில் ஆந்திர மாநில முதன்மை நிதித்துறை அலுவலகமான ‘நிதி பவன்’ உள்ளது. இங்கு நேற்று காலையில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வழக்கம்போல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்த 6 அடுக்கு கட்டடத்தின் 4 மற்றும் 5 ஆவது தளங்களில் சென்ட்ரல் ஏசியிலிருந்து திடீரென புகை கிளம்பியது. உடனே வேகமாக தீ பரவியது. இதனால் அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள் அவசர அவசரமாக வெறியேறினர்.

தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர். தீவிபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும் பல கணினிகள், சில முக்கிய ஆவணங்கள் தீயில் எரிந்துள்ளன என தெரியவந்துள்ளது. இதனால் சிறிது நேரம் இணைய சேவை முடங்கியது. இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

# இந்தியாவில் சட்டவிரோதமாக வசித்துவரும் பங்களாதேஷத்தினருக்கு எதிரான நடவடிக்கை

நாட்டில் சட்டவிரோதமாக வசிக்கும் பங்களாதேஷ் பிரஜைகளுக்கு எதிரான நடவடிக்கையை பல்வேறு மாநிலங்கள் தொடங்கியுள்ளன.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்குப் பிறகு உள்நாட்டுப் பாதுகாப்பு கருதி, இந்தியாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டினரை அடையாளம் கண்டு அவர்களின் சொந்த நாட்டுக்கு மத்திய அரசு திருப்பி அனுப்பி வருகிறது.

பங்களாதேஷில் இருந்து ஏராளமானோர் இந்திய எல்லைக்குள் ஊடுருவி நாடு முழுவதும் தங்கியிருக்கும் நிலையில் அவர்களை அடையாளம் காணும் பணியை ஒடிசா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், அசாம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மேற்கொண்டுள்ளன.

இதுதொடர்பில் ஒடிசா சட்ட அமைச்சர் பிரிதிவிராஜ் ஹரிச்சந்திரன் கூறுகையில்,

“பங்களாதேஷ் பிரஜைகளை அடையாளம் காணும் நடைமுறை ஒடிசாவில் ஏற்கெனவே தொடங்கிவிட்டது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் கடலோர பாதுகாப்பு அமைப்புகள் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணும் நடைமுறையை ஒருங்கிணைக்க சிறப்பு பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.” என்றார்.

மகாராஷ்டிர அரசும் இந்த நடைமுறையை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. மகாராஷ்டிராவில் இந்த



ஆண்டு இதுவரை சட்டவிரோத குடியேறிகள் 766 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் சமீப காலத்தில் 300 பேர் பங்களாதேஷுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா அண்மையில் கூறுகையில், “எல்லை தாண்டிய ஊடுருவல் அசாமுக்கு பெரிய பிரச்சினையாக உள்ளது. அசாமில் தடுப்புக்காவல் முகாமில் இருப்பவர்கள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ரோஹிங்கியாக்கள் மற்றும் பங்களாதேஷத்தினரை மத்திய அரசு நாடு கடத்தி வருகிறது. இதனால் இப்பிரச்சினையின் தீவிரம் குறைந்து வருகிறது.” என்றார்.

ராஜஸ்தானின் 17 மாவட்டங்களில் இதுவரை 1,008 ஊடுருவல்காரர்கள் கைது செய்யப்பட்டனர் என அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் முதல்கட்டமாக 148 பங்களாதேஷத்தினார் நாடு கடத்தப்படுவதற்காக மேற்கு வங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்துவதற்கு மேலும் ஒரு மாதத்திற்கு தடை




இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்துவதற்கான தடை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக சரவதேச ஊடகங்கள செய்தி வெளியிட்டுள்ளன.

காஷ்மீரில் உள்ள பஹல்காம் சுற்றுலா தளத்தில் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து மே 7ஆம் திகதி பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது 'ஒப்பரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்திய இராணுவம் பதிலடி தாக்குதல் நடத்தியது.

இதற்கிடையில் சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைப்பு, இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் நாட்டவர்கள் வெளியேற்றம் உள்ளிட்ட பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டது.

இதைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்தது. இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியில் பறக்க தடை விதிப்பதாக இந்திய அரசு அறிவித்தது.

அதே போல், இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியில் பறக்க தடை விதிப்பதாக அந்நாட்டு அரசு அறிவித்தது.

இந்நிலையில், இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்த மேலும் ஒரு மாதத்திற்கு தடை நீடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) விதிகளின் படி, ஒரு மாதத்திற்கு மேல் வான்வெளி கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது என்பதால், மே 23 ஆம் திகதி வரை இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்திய விமானங்கள் தங்கள் வான்வெளியில் பறப்பதற்கான தடையை மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டிக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளதாகவும் இது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் பாகிஸ்தான் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# காஸாவுக்கு உணவுப் பொருள்களை அனுமதிப்பதாக ஏமாற்றும் இஸ்ரேல்

## சர்வதேச தொண்டு அமைப்பு குற்றச்சாட்டு

காஸாவுக்குள் உணவுப் பொருள்களை அனுமதிப்பதாக இஸ்ரேல் கூறுவது ஏமாற்று வேலை என்று சர்வதேச தொண்டு அமைப்பான 'எல்லைகளுக்கு அப்பாற்பட்ட மருத்துவர்கள்' அமைப்பு குற்றச்சாட்டியுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் அவசரக்கால ஒருங்கிணைப்பாளர் கருத்து தெரிவித்துள்ளார். மேலும், தெரிவித்துள்ள அவர்,

"காஸாவுக்குள் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிப்பதாக இஸ்ரேல் கூறுவது, முழுமையான முற்றுகையை தாங்கள் நீக்கி விட்டதாகக் காட்டிக் கொள்வதற்காக செய்யப்பட்டுள்ள ஏமாற்று வேலை.

அங்கு வசிக்கும் 24 லட்சம் மக்களுக்கு இஸ்ரேல் அனுமதிக்கும் நிவாரணப் பொருள்கள் போதவே போதாது.

மிகச் சொற்பமாக உணவுப் பொருள்களை அனுமதிக்கும் இஸ்ரேலின் நடவடிக்கை, காஸா மக்களை பட்டினிச் சாவுக்கு உள்ளாக்குவதாக சர்வதேச நாடுகள் கூறுவதில் இருந்து தப்பிக்கும் உத்தி.

உண்மையில், காஸா மக்களை இஸ்ரேல் குற்றுயிரும் குலையுருமாகத்தான் வைத்திருக்கிறது." என அவர் தெரிவித்துள்ளார்.



காஸா பகுதி மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளமையினால், போரில் பட்டினியை ஓர் ஆயுதமாக இஸ்ரேல் பயன்படுத்துவதாகவும், இது சர்வதேச சட்டங்களுக்கு எதிரான போர்க் குற்றம் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த விவகாரத்தில் இஸ்ரேலுக்கும், பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே விரிசல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, காஸாவுக்குள் உணவுப் பொருள்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும் என்று இஸ்ரேல் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

இருந்தாலும், இந்த அறிவிப்பு வெறும் ஏமாற்று வேலை எனவும், மிகச் சொற்பமான அளவிலேயே உணவுப் பொருள்களை இஸ்ரேல் அனுமதிப்பதாகவும் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட மருத்துவர்கள் அமைப்பு குற்றச்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

வியாழக்கிழமை | 22/05/2025

## ஸ்கோஷியா வங்கியில் தொழில்நுட்ப கோளாறு

*பயனாளர்களின் சேவை தடைப்பட்டதாக முறைப்பாடு*

ஸ்கோஷியா வங்கியின் நூற்றுக்கணக்கான பயனாளர்களின் சேவை தடைபட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 03




# கனடா பிரதமர் மார்க் கார்னி மீது மக்களுக்கு நம்பிக்கை அதிகரிப்பு

## புதிய கருத்துக்கணிப்பில் தகவல்

கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி மீது தற்போது கனடியர்களுக்கு கூடுதல் நம்பிக்கை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் முதற்கால ஆட்சியிலும், அவரது கடைசி நாள்களிலும் இருந்ததை விட கார்னி மீதான நம்பிக்கை அதிகமாக உள்ளது என புதிய கருத்துக்கணிப்பு ஒன்று வெளிக்காட்டியுள்ளது.

புருப் ஸ்டெடர்ஜீஸ் கன் ட்ரஸ்ட் இன்டெக்ஸ் Proof Strategies CanTrust Index எனப்படும் இந்த வருடாந்த கருத்துக்கணிப்பை, தி டொகிட் குருப் The Logit Group மே 5 முதல் மே 14 வரை நடத்தியது. இதில் 1,250 கனடியர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. 02

# பிரிட்டிஷ் கொலம்பியவில் விமான விபத்து; மூவர் காயம்

கனடாவின், பிரிட்டிஷ் கொலம்பியா கடற்கரையில், சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற விமானமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

சீப்ளேன் ரக விமானமே இவ்வாறு கடலில் விழுந்ததுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பயணித்த மூவரும் சிறிய காயங்களுடன் உயிர் தப்பினர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் சன்ஷைன் கோஸ்ட் பகுதியில் உள்ள 02





# கனடாவில் படிக்க இந்திய மாணவர்களுக்கு வழங்கப்படும் அனுமதி 31 வீதமாக சரிவு

இந்தியாவில் இருந்து செல்லும் மாணவர்களுக்கு கனடா அரசால் வழங்கப்படும் கல்வி கற்பதற்கான அனுமதி தொடர்ந்து சரிந்து வருகிறது. 2024 ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டுடன் ஒப்பிடும்போது, இந்த காலாண்டில் மட்டும் மூன்றில் ஒரு பங்கு சரிந்துள்ளது.

கனடா குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமைத் துறை வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2025 முதல் காலாண்டில் இந்தியாவில் இருந்து செல்லும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை 30,640 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதேகாலகட்டத்தில் இந்த எண்ணிக்கை 44,295 ஆக இருந்தது. அதாவது இந்த ஆண்டு 31வீதம் வரை சரிந்துள்ளது. இந்தியா மட்டுமின்றி ஒட்டுமொத்தமாக சர்வதேச நாடுகளில் இருந்து கனடாவில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி 2024 காலாண்டில் 1,21,070. இதுவே இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 96,015 ஆக உள்ளது.

சர்வதேச நாடுகளில் இருந்து கல்வி கற்க வரும் மாணவர்களை அனுமதிப்பதில் தொடர் சரிவையே இவை பிரதிபலிக்கின்றன. 2023 இறுதிக் காலாண்டில் இருந்து பெருமளவு வெளிநாட்டு மாணவர்களுக்கான அனுமதியை கனடா குறைத்து வருவதை இது காட்டுகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகளில் இருந்து வந்த மாணவர்களில் 6,81,155 பேருக்கு கனடா அரசு அனுமதி அளித்தது. இதில், 2,78,045 பேர் இந்திய மாணவர்கள். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 5,16,275 எனக் குறைந்தது. இதில், இந்திய மாணவர்கள் 1,88,465 பேர்.

குடியேற்றத் தரவுகளில் இருந்த குளறுபடிகள் கொள்கை மாற்றத்திற்கு வழிவகுத்தது. வீடுகளுக்கு வாடகை செலுத்த முடியாத நிலை, உடல்நலனைப் பேண வேண்டிய அழுத்தம், போக்குவரத்து போன்றவையும் பகுதியளவு காரணங்களாகப் பார்க்கப்படுகின்றன.

இதனிடையே மீண்டும் ஆட்சியைப் பிடித்து புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள மார்க் கார்னி, தற்போதுள்ள நிலையே தொடரும் என உறுதிப்படத் தெரிவித்தார்.

கனடாவில் படிக்க, தொழில் புரிய, வேலைக்காக என பல்வேறு காரணங்களால் தற்காலிக குடியேற்றம் கொண்டவர்களின் எண்ணிக்கை, ஒட்டுமொத்த நாட்டின் மக்கள் தொகையில் 5 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

## கனடா பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

52 வீத கனடியர்கள் மார்க் கார்னி மீது நம்பிக்கை வைத்திருப்பதாக தெரிவித்துள்ளனர். இது கடந்த ஜனவரியில் ஜஸ்டின் ட்ருடோவுக்கு இருந்த 26 வீத நம்பிக்கையைவிட இரட்டிப்பு அளவு நம்பிக்கை கார்னி மீது மக்கள் கொண்டுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு நடந்த Proof Strategies கருத்துக்கணிப்பில், ட்ருடோவுக்கு 46 வீத நம்பிக்கை இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கன்சர்வேட்டிவ் கட்சி தலைவரான பியர் பொய்லிவ் மீது நம்பிக்கை தற்போதும் உயரவில்லை என கணிப்பு தெரிவிக்கிறது.

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெ:ப்யூஜ் கோவ் அருகே இடம்பெற்றுள்ளது.

விக்டோரியாவிலுள்ள முக்கிய மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (JRCC) இந்த விபத்துக்கான அழைப்பைப் பெற்றதும், “Cape Caution” எனும் கடற்படைக் கப்பலும், உள்ளாட்சி மீட்பு படகும் அனுப்பப்பட்டன. இந்த விமானத்தில் மூன்று பேர் பயணித்துள்ளனர்.

விமானம் கடலில் விழுந்தவுடன், அவர்கள் மூவரும் வெளியேற முடிந்தது,” என்று JRCC பேச்சாளர் கேப்டன் பெட்ரம் மொஹ்யெடின் கூறினார்.

விபத்து நேரத்தில் அருகில் இருந்த பல தனியார் படகுகளில் இருந்தவர்கள், பயணிகளை மீட்க விரைவாக களமிறங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமான விபத்து தொடர்பிலான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் கியூபெக்கில் ஒருவர் பலி

கனடாவின், மொன்ரியாலின் வட பகுதியில் அமைந்துள்ள பிளேன் வில்லே நகரத்தில் கட்டடம் இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில், மேலும் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிசெல்-பொஹெக் புல்வதியில் கட்டுமானத்தில் இருந்த வணிகக் கட்டடம் ஒன்றே இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது.

இடிபாடுகளுக்குள் இருந்து உயிரிழந்த தொழிலாளியின் உடல் மீட்கப் பட்டது என பிளேன்வில்லே பொலிஸ் பேச்சாளர் சாரா டூசிஞ்யா தெரிவித் துள்ளார்.

உயிரிழந்த தொழிலாளியின் பெயர் விவரங்கள் இன்னும் வெளி யிடப்படவில்லை.

கடந்த சில நாள்களில் பெய்த கன மழையால், அந்த பகுதியில் மண் மிகவும் அபாயகரமான நிலை யில் காணப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இதுவே இடிபாட்டுக்கு காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தே கம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த தொழி லாளியின் குடும்பத்திற்கு தனது இரங்கலை வெளியிடுவதாக கியூபெக் தொழிலாளர் பாதுகாப்பு அமைச்சர் ஜீன் புலே தெரிவித்துள்ளார்.




## ஸ்கோஷியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளைத் தொடர்ந்து, மீண்டும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளதாக அந்த வங்கி அறிவித்துள்ளது.

ஸ்கோஷியா வங்கியின் மொபைல் செயலியில் வெளியான அறிவிப்பில், அலைபேசி செயலி மற்றும் ஆன்லைன் வங்கி சேவைகளும் தடைப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

புதன் கிழமை காலை 8.15 முதல் 9.00 மணி வரை அந்த மொபைல் வங்கி சேவையில் தடை ஏற்பட்டது என வங்கி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேவை பாதிப்புகள் குறித்த புகார்கள் அதிக அளவில் 8.36 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. சுமார் 675 முறைப்பா டுகள் செய்யப்பட்டன என தெரிவிக் கப்படுகின்றது.

வங்கி தற்போது தனது அனைத்து சேவைகளும் மீண்டும் வழக்கமானபடி இயங்குகின்றன என உறுதிபடுத்தி யுள்ளது.